தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப.(ஓ)

ஆணை எண்.188/பேரூ/2019

நாள் 07.12.2021

திரு. A. செல்வம்,
பழனிசெட்டிபட்டி, தேனி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பூதிப்புரம் பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

தேனி மாவட்டம் மற்றும் வட்டம், பழனிசெட்டிபட்டி, கதவு எண்.7/W சஞ்சய்காந்தி தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. A.செல்வம் என்பவரது 14.11.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.11.2019ல் பெறப்பட்டு 188/2019 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம் மற்றும் வட்டம், பழனிசெட்டிபட்டி, கதவு எண்.7/W சஞ்சய்காந்தி தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. A.செல்வம் அளித்துள்ள தமது 14.11.2019 நாளிட்ட மனுவில் தேனி மாவட்டத்தில் உள்ள பூதிப்புரம் பேரூராட்சியில் சுமார் 1 கோடி மதிப்பில் தார் சாலை அமைக்கும் பணி நடைபெற்று முடிந்துள்ளன என்றும், மேலும் பலகோடி மதிப்பில் பேரூராட்சியின் சார்பில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார். மேற்படி தார்சாலை அமைக்கும் பணியை ஆண்டிபட்டியைச் சேர்ந்த வேலுச்சாமி என்பவர் ஒப்பந்தம் எடுத்து சப்கான்ராக்டாக அவரது மருமகன் ஜெயாமகேஷ் என்பவருக்கு கொடுத்து வேலைசெய்து வருகிறார். மேற்படி தார்சாலை அமைக்கும் பணியை கண்டுகொள்ளாமல் இருக்க பல இலட்சம் கையூட்டு பெற்று மேற்படி ஊழலுக்கு

ஆதரவாக EO கார்த்திகேயன், பொறியாளர் அய்யப்பன் ஆகிய இருவரும் செயல்பட்டு வருகின்றனர். மேலும் செயல் அலுவலர் கார்த்திகேயன் என்பவர் பூதிப்புரம் பேரூராட்சியில் நடைபெறாத பல வேலைகளுக்கு நடைபெற்றதாக பொய் கணக்கு காட்டி வவுச்சர் போட்டு பல லட்ச ரூபாய் வரை கையாடல் செய்து வருகிறார். இதுமட்டுமல்லாமல் தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து பேரூராட்சிகளின் வளர்ச்சிப் பணிகளை கண்காணிக்கும் உதவி இயக்குநர் விஜயலட்சுமி என்பவர் வேலையை எப்படிவேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள் எனக்கு தரவேண்டியதை சரியாக கொடுத்துவிடுங்கள் என E.O–க்களுக்கும், பொறியாளர்களுக்கும் உத்தரவிட்டு கடந்த தீபாவளியை முன்னிட்டு அனைத்து ஒப்பந்ததாரர்களிடம் EOக்களை வசூல்செய்யச் சொல்லி தீபாவளிக்கு சிறப்பு லஞ்சவேட்டை நடத்தி கோடிக்கணக்கில் வசூல் செய்து முடித்துள்ளார். அதை எங்கள் கட்சியின் போடி ஒன்றியக்குழுவின் சார்பாக சுட்டிக்காட்டி நோட்டீஸ் அடித்து பொது மக்களுக்கு விநியோகம் செய்துள்ளோம். இதேபோல் வீரபாண்டி பேரூராட்சியில் சுமார் 1 கோடி மதிப்பில் நடைபெற்று முடிந்த தார்சாலை பணியை கண்ணன் என்பவர் ஒப்பந்தம் எடுத்து வேலைசெய்து வந்தார். மேற்படி தார்சாலை போட்டு ஒருமாதம்கூட முடியாத வேலையில் தற்போது பெய்த மழையில் சேதம் அடைந்துள்ளது. பொறியாளர் அய்யப்பன் கட்டுப்பாட்டில் இருக்கும் அனைத்து பேரூராட்சிகளில் நடந்துமுடிந்த தார்சாலை பணிகளில் நிலைமையும் இதே போன்றுதான். எனவே பொறியாளர் ஐயப்பன் லஞ்சம் பெற்றுக்கொண்டு கையொப்பமிட்ட பூதிப்புரம் தார்சாலை பணி, வீரபாண்டி தார்சாலை பணி ஒப்பந்தம் எடுத்த ஒப்பந்ததாரர்களை வேலுச்சாமி, கண்ணன் ஆகிய இருவருக்கும் அரசு வழங்கவேண்டிய ஒப்பந்த பணத்தை நிறுத்திவைத்து வேறு பேரூராட்சிகளில் பொறியாளர் அய்யப்பன் கையொப்பமிட்ட ஒப்பந்த பணிகளின் ஒப்பந்த பணத்தை நிறுத்தைவைத்தும், AD விஜயலட்சுமி சொந்த மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் உள்ள அவரது வீடு, மதுரையில் உள்ள பொறியாளர் அய்யப்பன் வீடு, சேலம் மாவட்டத்தில் உள்ள EO கார்த்திகேயன் வீடு ஆகிய மூவரின் வீட்டையும் லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு காவல்துறையினர் மூலம் சோதனை மேற்கொண்டு வருமானத்திற்கு அதிகமாக அவர்கள் சேர்த்துவைத்துள்ள சொத்துக்களின் ஆவணங்களை கைப்பற்றி மேற்படி மூவர் மீதும் ஊழல் வழக்கு பதிவுசெய்து துறை ரீதியாக மேற்படி மூவரும் எந்தவித பதவி உயர்வுக்கும் எதிர்காலத்தில் சென்றுவிடாதபடி கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திட விசாரணை மேற்கொண்டு உரிய ஆணையினை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார்மனு அளித்துள்ளார்.

2. மனுதாரரின் மேற்படி புகார் மனு முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு அனுப்பப்பட்டு, அதன் நகல் பல்வேறு அரசு அலுவலங்கள் மற்றும் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறைக்கும் முகவரியிடப்பட்டு அனுப்பப்பட்டு, அதன் நகல் இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனுவாக இணைத்தனுப்பப்பட்டுள்ளது. மனுதாரர் தனது புகார் மனுவில் பூதிப்புரம் மற்றும் வீரபாண்டி பேரூராட்சிகளில் நடைபெற்று முடிந்த தார்சாலை பணிகளில் நடைபெற்றுள்ள முறைகேடுகள் குறித்தும், தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து பேரூராட்சி வளர்ச்சிப் பணிகளை கண்காணிக்கும் உதவி இயக்குநர் விஜயலட்சுமி அனைத்து ஒப்பந்ததாரர்களிடம் EOக்கள் மூலமாக லஞ்சவேட்டை நடத்தி கோடிக்கணக்கில் வசூல் செய்துள்ளார் என்றும், பூதிப்புரம் பேரூராட்சியில் நடைபெற்ற

சாலை அமைக்கும் பணியை கண்டுகொள்ளாமல் இருக்க செயல் அலுவலர் கார்த்திகேயன், பொறியாளர் அய்யப்பன் ஆகிய இருவரும் பல லட்சம் கையூட்டு பெற்றுக்கொண்டு ஊழலுக்கு ஆதரவாக செயல்படுவதாகவும் குறிப்பிட்டு புகார் மனு அளித்ததால், அதற்கான ஆதார ஆவணங்களை அவரிடம் பெற்றுக்கொள்ள முடிவு செய்யப்பட்டு, மனுதாரரை 8.1.2020 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.11.2019 நாளிட்ட அழைப்பாணை அவருக்கு இம்முறைமன்ற நடுவத்தினால் அனுப்பப்பட்டது. மேலும், மனுதாரரது புகார்மனு பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு 20.11.2019ல் அனுப்பப்பட்டு அதன் மீது அவரது விளக்க அறிக்கையும் கோரப்பட்டது. மனுதாரர் 8.1.2020 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. மீண்டும் 25.2.2020 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் செயல் அலுவலர்/பேரூராட்சி பொறியாளர், பூதிப்புரம் பேரூராட்சி ஆகியோருக்கு 10.01.2020 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டு, பின்னர் நிர்வாக காரணங்களால் மேற்படி விசாரணை வேறொரு தேதிக்கு மாற்றம் செய்யப்படுவதாகவும், விசாரணைக்கான நாள் மற்றும் நேரம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு 4.2.2020 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர், 19.4.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு 25.3.2021 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. இதனிடையே கொரோனா தொற்று பரவல் அதிகரித்ததன் காரணமாக மேற்படி விசாரணையும் தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

3. பின்னர் 27.7.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு 5.7.2021 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. மனுதாரர் 27.7.2021 அன்றைய நேரடி விசாரணையிலும் ஆஜராகவில்லை. பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி இளநிலைப் பொறியாளர் ஆகியோர் 27.7.2021 நாளிட்ட நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலத்தில் "தேனி மாவட்டம், பூதிப்புரம் பேரூராட்சி வார்டு 2, வாழையாத்துப்பட்டி வார்டு 15, கோட்டைமேட்டு தெரு மற்றும் கல்குவாரிக்குச் செல்லும் சாலையில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நடைபெற்ற பணிகளை உதவி செயற்பொறியாளர், உதவிப் பொறியாளர் மற்றும் செயல் அலுவலர் ஆகியோர்களால் நேரடி தல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்கண்ட பணிகள் முடிவடைந்தவுடன் தரக் கட்டுப்பாட்டு ஆய்வு அலுவலரால் (State Quality Monitor) ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை வழங்கப்பட்டது. அதன் நகல் மற்றும் சாலைகள் போடப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட புகைப்பட நகல் ஆகியவை இம்மன்றத்தின் முன்பு சமர்ப்பிக்கிறோம். மேலும் மேற்கண்ட பணியில் எவ்வித தவறும் நடைபெறவில்லை என்பதையும் இம்முறைமன்றத்தில் பதிவுசெய்கிறோம்" என்று தெரிவித்துள்ளனர்.

4. பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் நேரடி விசாரணையின்போது அளித்துள்ள 27.7.2021 நாளிட்ட அறிக்கையில் தேனி மாவட்டம், பூதிப்புரம் பேரூராட்சியில் 2019–2020ஆம் ஆண்டு வார்டு 2 வாழையாத்துப்பட்டி, வார்டு 15, கோட்டைமேட்டு தெரு மற்றும் கல்குவாரிக்குச் செல்லும் சாலையில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.1.00 கோடி (ரூபாய் ஒரு கோடி மட்டும்) மதிப்பீட்டிலான வேலைக்கு பேரூராட்சி மன்ற தீர்மானம் பெறப்பட்டு, பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெற்று, செயற் பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி

பெறப்பட்டும், பணியாணை ஒப்பந்ததாரர் திரு. எஸ். வேலுச்சாமி என்பவருக்கு வழங்கப்பட்டது. பணி நடைபெற்றுவரும்பொழுது பணியினை உதவி செயற் பொறியாளர், உதவிப் பொறியாளர் மற்றும் செயல் அலுவலர் ஆகியோரால் நேரடி தல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்றுள்து. பணி முடிவடைந்த பின் தரக்கட்டுப்பாட்டு ஆய்வு அலுவலர் (State Quality Monitor) அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து அதன் நகலினையும் இம்முறைமன்றத்திற்கு பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ளார். இப்பணியானது 14.10.2019 அன்று நல்லமுறையில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி பணிக்குரிய பட்டியல் தொகை ஒப்பந்ததாரர் திரு. எஸ். வேலுச்சாமி என்பவருக்கு காசோலை மூலம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டின் நகல், பூதிப்புரம் பேரூராட்சி மன்ற தீர்மான நகல், பேரூராட்சிகளின் இயக்குநரின் நிர்வாக அனுமதி நகல், ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டபின் ஏற்பட்ட உடன்படிக்கையின் (Agreement) நகல், மண்டல சோதனை ஆய்வுக்கூடம், கோ.புதூர், மதுரை அளித்துள்ள பரிசோதனை சான்றிதழ் (Test Certificate) பூதிப்புரம் பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்ட சாலைப் பணிகள் மேற்கொள்ளபடுவதற்கு முன்னர் இருந்த சாலைகள்/பணிகள் மேற்கொண்டு முடிக்கப்பட்டபின் சாலைகளின் நிலை குறித்த புகைப்படங்கள், பணிகள் நடைபெற்றபோது பணிகளை கண்ணாணித்த/ஆய்வு செய்த புகைப்படங்கள், ஒப்பந்ததாரருக்கு ஒவ்வொரு நிலையில் (Stage) வங்கி மூலமாக வழங்கப்பட்ட தொகை குறித்த விவரங்கள் ஆகிய அனைத்தையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ளார்.

5. மனுதாரருக்கு இறுதியாக மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கிட இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அதன் அடிப்படையில் 15.9.2021 .ன்று நேரடி விசாரணையில் ஆஜராகி தமது தரப்பிலான விளங்கள்/ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு 11.8.2021 நாளிட்ட அழைப்பாணை ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது. ஆனால் மனுதாரர் இம்முறையும் நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.

6. மனுதாரரது புகார் மனு, பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கை, வாக்குமூலம் மற்றும் வாக்குமூலத்துடன் அளிக்கப்பட்ட கூடுதல் அறிக்கை, ஆவணங்கள், புகைப்படங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் மிக கவனமுடன் பரிசீலிக்கப்ப்ட்டதில் கீழ்க்காணும் விவரங்கள் அறியப்படுகின்றன:-

- ❖ தேனி மாவட்டம், பூதிப்புரம் பேரூராட்சியில் 2019–2020ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.1.00 கோடி (ரூபாய் ஒரு கோடி மட்டும்) மதிப்பீட்டிலான சாலைப்பணிகள் முறையான ஒப்பந்த விதிமுறைகளை கடைபிடித்து, ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு, ஒப்பந்ததாரரால் பணிகள் 14.10.2019ல் நல்லமுறையில் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளன என்பது பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் அவர் அளித்துள்ள ஆவணங்கள் மூலமும் தெரியவருகிறது.

- சாலைகள் அமைக்கப்பட்டதில் ஊழல் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக புகார் மனு அளித்துள்ள மனுதாரர் தனது புகார் குறித்து ஆதார ஆவணங்கள் எதனையும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை
- மேலும் ஒருமுறைகூட இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. பொத்தாம் பொதுவாக ஊழல் நடைபெற்றுள்ளது என்று புகார் மனு அளித்துவிட்டு அதன் பின்னர் அதன் மீதான விசாரணைகளில் ஆஜராகாமலும், பல்வேறு காலக்கட்டங்களில் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தினால் அனுப்பப்பட்ட அழைப்பாணைகளுக்கு தம்மால் வரஇயலாமைக்கான காரணத்தை இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கவில்லை. இவ்வாறான செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது. மேலும், இதுபோன்று நடந்துகொள்வதை மனுதாரர் இனிவரும் காலங்களில் தவிர்க்குமாறும் எச்சரித்து அறிவுறுத்தப்படுகிறது.

7. இந்நிலையில், பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள அறிக்கையினை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையினை இத்துடன் முடித்துவைக்கலாமென இம்முறைமன்ற நடுவம் முடிவுசெய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2021ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 07 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. A. செல்வம்,
த/பெ அய்யனார்,
7/W சஞ்சய் காந்தி தெரு, பழனிசெட்டிபட்டி அஞ்சல்,
தேனி மாவட்டம் மற்றும் வட்டம்

செயல் அலுவலர், பூதிப்புரம் பேரூராட்சி, தேனி மாவட்டம்

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்